ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2343/60 - 2023 අගෝස්තු මස 04 වැනි සිකුරාදා - 2023.08.04

*2343/60 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 3/2021* (II)

**2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்**

*2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 52 ஆம், 53 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 71 ஆம் பிரிவின்கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2023, ஓகத்து 04.*

**ஒழுங்குவிதிகள்**

*1.* இவ்வொழுங்குவிதிகள் 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்குவதன்மீதான வழிகாட்டுநெறிகள்) பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. பின்வரும் கட்டளைக்கற்களுள் ஏதேனுமொன்றைத் திருப்திப்படுத்துகின்ற கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பினுள் ஒரு காணித்துண்டைக் குத்தகைக்கெடுத்து அபிவிருத்தி செய்வதற்கு முதலீடொன்றைச் செய்கின்ற வியாபாரத்தில் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும் ஈடுபட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், செயல்நுணுக்க முக்கியத்துவமான ஆரம்ப வியாபாரமாகப் பெயர் குறிக்கப்படுதல் வேண்டும் :

(அ) கொழும்புத் துறைமுக நகர (அபிவிருத்திக் கட்டுப்பாட்டு, ஒழுங்குவிதிகளுக்கிணங்க ஓர் உட்பிரிவிடப்பட்ட காணித்துண்டில் ஒரு காணித்துண்டுக்குக் குறைந்தபட்சம் நூறு மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களைக் கொண்டவொரு முதலீட்டை அல்லது விகிதப்படியான முதலீட்டைச் செய்வதற்கும் ; அல்லது

(ஆ) மரீனா அல்லது சமூக உட்கட்டமைப்புக்கான காணித்துண்டுகளில் குறைந்தபட்சம் இருபத்தைந்து மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களைக் கொண்டவொரு முதலீட்டைச் செய்வதற்கும்.

3. (1) செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த ஆரம்ப வியாபாரமாகப் பெயர் குறிக்கப்பட்ட வியாபாரங்கள், பின்வரும் திட்டங்களில் குறித்துரைக்கப்பட்ட விலக்களிப்புகளுக்கு அல்லது ஊக்குவிப்புகளுக்கு உரித்துடையனவாதல் வேண்டும் :-

(அ) (i) சட்டத்தின் 53 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி வர்த்தமானியில் கட்டளையொன்று வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இருபத்தைந்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்காக, சட்டத்தின் அட்டவணை II இல் தரப்பட்டுள்ள சட்டவாக்கங்களிலிருந்தான விலக்களிப்புக்கள் அல்லது அவற்றின்கீழான ஊக்குவிப்புக்கள் ; அத்துடன்

(ii) விடயம் (i) இல் குறித்துரைக்கப்பட்ட இருபத்தைந்து ஆண்டுகளைக்கொண்ட காலப்பகுதி முடிவுறுவதனை அடுத்துவரும் பத்தாண்டுக் காலப்பகுதிக்காக, அத்தகைய செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த ஆரம்ப வியாபாரங்களின் எல்லா ஈட்டுகைகளிலிருந்தும் இலாபங்களிலிருந்தும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் முறையான வரிமதிப்பீட்டாண்டுக்காக ஏற்புடையற்பாலதான நிலவுகின்ற கூட்டிணைக்கப்பட்ட வரிவீதத்தின் 50% ஊக்குவிப்பொன்று ; அல்லது

(ஆ) (i) வரிமதிப்பீட்டாண்டொன்றின்போது கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் பயன்படுத்தப்பட்ட அருவச் சொத்துக்கள் அல்லாத தேய்வுறக்கூடிய சொத்துக்களின்மீது உறப்பட்ட செலவுகளின் 300% அதிகரித்த மூலதன விடுதொகையைக்கொண்ட ஊக்குவிப்பொன்று. மூலதன விடுதொகையானது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான நான்காம் அட்டவணைக்கிணங்க கணிக்கப்படும். கணிக்கப்பட்டு கழிப்பனவு செய்யப்பட்ட அதிகரித்த மூலதன விடுதொகைகள் விடுவிக்கப்படாத இழப்பை விளைவிக்குமிடத்து, அத்தகைய விடுவிக்கப்படாத இழப்பு அடுத்துப்பின்வரும் ஆண்டுகளுள் ஏதேனுமொன்றிலான வரிமதிப்பீட்டாண்டுக்கான வருமானத்தைக் கணக்கிடும் நோக்கங்களுக்காகக் கழிப்பனவு செய்யப்படலாம் ; ஆனால் இது, சட்டத்தின் 53 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி வர்த்தமானியில் கட்டளையொன்று வெளியிடப்படும் திகதியிலிருந்து நாற்பதாண்டுகளை விஞ்சுதலாகாது ; அத்துடன்

(ii) சட்டத்தின் 53 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி வர்த்தமானியில் கட்டளையொன்று வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இருபத்தைந்து ஆண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதிக்காக, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் தவிர்ந்த, சட்டத்தின் அட்டவணை II இல் தரப்பட்டுள்ள சட்டவாக்கங்களிலிருந்தான விலக்களிப்புக்கள் அல்லது அவற்றின்கீழான ஊக்குவிப்புகள்.

(2) செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த ஆரம்ப வியாபாரமொன்று, (1) ஆம் உப ஒழுங்குவிதியின் இ விடயம் (ஆ) என்னும் விடயத்தில் குறித்துரைக்கப்பட்ட இரு விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்புத் திட்டங்களிலிருந்து தெரிவொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தெரிவை ஆணைக்குழுவுக்கு அறிவித்தலும் வேண்டும். அத்தகைய தெரிவு இறுதியானதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் மாற்றப்படுதலும் ஆகாது.

4. (1) உப ஒழுங்குவிதி (2) இல் குறித்துரைக்கப்பட்ட வியாபாரச் செயற்பாடுகளுள் ஏதேனுமொன்றை ஊக்குவிக்கின்றதும் மேம்படுத்துகின்றதும் உப ஒழுங்குவிதி (3) இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளைக்கற்களுள் ஏதேனுமொன்றைத் திருப்திப்படுத்துகின்றதுமான கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும் வியாபாரத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், செயல்நுணுக்க முக்கியத்துவமான இரண்டாம்நிலை வியாபாரமாகப் பெயர் குறிக்கப்படுதல் வேண்டும்.

(2) உப ஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வியாபாரச் செயற்பாடுகள் பின்வருமாறாதல் வேண்டும் :

(அ) சர்வதேச வியாபாரத்தில் உலகளாவிய மற்றும் பிராந்தியப் பொருளாதாரச் செயற்பாடு ;

(ஆ) கப்பற்றொழில் முகாமைத்துவத் தொழிற்பாடுகள் ;

(இ) கரைகடந்த வங்கித்தொழிலும் நிதியும் ;

(ஈ) தகவல் தொழில்நுட்பவியல் ;

(உ) வியாபார வழிமுறையில் வெளியாட்களை பணிக்கமர்த்தல் முறை ;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட தலைமையகங்களின் தொழிற்பாடுகள் ;

(எ) பிராந்திய விநியோகிப்புத் தொழிற்பாடுகள் ;

(ஏ) சுற்றுலாப்பயணமும் வேறு துணைநிலையான சேவைகளும் ;

(ஐ) புத்தாக்கம் ;

(ஒ) தொழிற்றுறை உரிமையாண்மை ;

(ஓ) களியாட்டம் ;

(ஔ) தொழில் வாய்ப்புக்களைத் தோற்றுவித்தல் ;

(க) நிலைபெறுதகு அபிவிருத்தி ; அல்லது

(ங) வதிவிடச் சமுதாயமொன்றைக் குடியமர்த்துவதில் நகர வாழ்வசதித் தொழிற்பாடுகள்.

(3) உப ஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கட்டளைக்கற்கள் பின்வருமாறாதல் வேண்டும் :

(அ) அதிகாரமளிக்கப்பட்ட ஆள் அல்லது அதன் தாய்க் கம்பெனி, ஐம்பது மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்ட வருடாந்த உலகளாவிய வருவாயைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஆ) தொழிற்பாடுகள் தொடங்கியதிலிருந்து ஐந்தாண்டுகளினுள் குறைந்தபட்சம் நூறு ஊழியர்கள் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் தொழிலுக்கமர்த்தப்படுதல் வேண்டும் ;

(இ) சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு உரிமமொன்றை வழங்கிய திகதியிலிருந்து ஐந்தாண்டுகளினுள் ஆகக்குறைந்தது ஐந்து இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்களையேனும் கொண்ட தொழில் முயற்சிப் பெறுமான மதிப்பீட்டுடன், அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஆரம்பிக்கின்ற அல்லது வளர்ச்சிக்கட்ட வியாபாரமாகவிருத்தல் வேண்டும் ; அல்லது

(ஈ) புத்தாக்கத்தை, அறிவுக் கைமாற்றலை, தொழில்நுட்பக் கைமாற்றலை, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை ஆதரிப்பதன்மூலம் வியாபாரமானது இலங்கையில் பொருளாதார, சமூக அபிவிருத்திக்குப் பங்களிக்கும், அல்லது கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் ஒரு சர்வதேச நிதி நிலையத்தை உருவாக்குவதற்கான உத்வேகத்தைத் தோற்றுவிக்கும் என அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஆணைக்குழுவின் திருப்திக்கு எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

5. செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம்நிலை வியாபாரங்கள் எனப் பெயர் குறிக்கப்பட்ட வியாபாரங்கள், சட்டத்தின் 53 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி வர்த்தமானியில் கட்டளையொன்று வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இருபத்தைந்தாண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதிக்காக சட்டத்துக்கான அட்டவணை II இல் தரப்பட்டுள்ள சட்டவாக்கங்களிலிருந்தான விலக்களிப்புக்களுக்கும் அல்லது அவற்றின்கீழான ஊக்குவிப்புகளுக்கு உரித்துடையனவாதல் வேண்டும்.

6. இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்களுக்கு அல்லது ஊக்குவிப்புகளுக்கு உரித்துடையவராகவிருப் பதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், இவ்வொழுங்குவிதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இரண்டாண்டுகளைக் கொண்டவொரு செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த ஆரம்ப வியாபாரங்களாக அல்லது செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த இரண்டாம்நிலை வியாபாரங்களாகப் பெயர் குறிக்கப்படுதல் வேண்டும்.

7. இரண்டாயிரத்து இருபத்து மூன்றாம் ஆண்டு யூலை 7 ஆந் திகதிய 2339/ 32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்குவதன் மீதான வழிகாட்டுநெறிகள்) பற்றிய ஒழுங்குவிதிகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

8. இவ்வொழுங்குவிதிகளில் -

"சட்டம்" என்பது, 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் என்று பொருளாகும் ;

"கொழும்புத் துறைமுக நகர (அபிவிருத்திக் கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்" என்பது, 2023 ஆம் ஆண்டு யூன் 2 ஆந் திகதிய 2334/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கொழும்புத் துறைமுக நகர (அபிவிருத்திக் கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் என்று பொருளாகும் ;

"ஆணைக்குழு" என்பது, சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு என்று பொருளாகும் ;

"மரீனா" என்பது, கொழும்புத் துறைமுக நகர (அபிவிருத்திக் கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளில் மரீனா வர்த்தகக் காணிப் பாவனைக்காகவும் மரீனா வசதிக் காணிப் பாவனைக்காகவும் பெயர் குறிக்கப்பட்ட காணித்துண்டுகள் என்று பொருளாகும் ; அத்துடன்

"சமூக உட்கட்டமைப்பு" என்பது, கொழும்புத் துறைமுக நகர (அபிவிருத்திக் கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளில் கல்வி, கலாசார மற்றும் சுகாதாரக் கவனிப்பு மற்றும் சமவாய நிலையைக் காணிப் பாவனைக்காகப் பெயர் குறிக்கப்பட்ட காணித்துண்டுகள் என்று பொருளாகும்.

EOG 08 - 0070

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.